


22. 06. 2026

# தலைப்புச் செய்திகள்

- தமிழக தொழிற்சாலைகளில் வரும் காலங்களில் விபத்துக்களை தவிர்க்க உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்று மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. முகமது பர்வேஷ் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தின் உரிமை மற்றும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தில் மாநில அரசு எவ்வித சமரசமும் செய்யாது என்று நீர்வளத்துறை அமைச்சர் திரு. ஆனந்த் தெரிவித்துள்ளார்.
- மேகதாது அணை விவகாரத்தில் சட்ட வல்லுநர்களின் ஆலோசனை படியே புதிய நடுவர் மன்றம் அமைக்கவேண்டுமென தனித் தீர்மானத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா கூறியுள்ளார்.
- நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் முக்கிய பங்காற்றுவதாக ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா குறிப்பிட்டுள்ளார்.

5. கோவை, நீலகிரி, திண்டுக்கல் உள்ளிட்ட 7 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

சட்டப்பேரவை

தமிழகத்தில் உள்ள அனைத்து தொழிற்சாலைகளிலும் விபத்து நடைபெறாமல் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொண்டு வருவதாக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. முகமது பர்வேஷ் தெரிவித்தார்.

நேற்றைய தினம் திருவள்ளூர் மாவட்டம் கன்னிகைபேரில் தனியார் தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்து குறித்து சட்டப் பேரவையில் இன்று அவை விதி 110-ன் கீழ் விளக்கம் அளித்த அமைச்சர், இந்த தகவல் தெரிந்ததும் முதலமைச்சர் எடுத்த துரிதமான நடவடிக்கைகளை சுட்டிக்காட்டினார்.

விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்ச ரூபாய் நிதியுதவி வழங்கவும்,

படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு உரிய தீவிர சிகிச்சைகளை அளிக்கவும் முதலமைச்சர் அறிவுறுத்தியதாகவும் கூறினார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு தொழிலாளர் மாநில ஈட்டுறுதி காப்பீடு திட்டம் மற்றும் வருங்கால வைப்பு நிதியை உடனடியாக

வழங்கவும் முதலமைச்சர் ஆணை பிறப்பித்ததாகவும் தெரிவித்தார்.

இவ்விபத்து குறித்து தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை இயக்குநர், மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் உள்ளிட்டோர் விசாரணை நடத்தி 24 மணி நேரத்திற்குள் முதலாவது அறிக்கையையும், முழுமையான விவரங்களுடன் 3 நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு முதலமைச்சர் உத்தரவிட்டதையும் சுட்டிக்காட்டினார்.

தொழிற்சாலைகளில் வரும் காலங்களில் எவ்வித விபத்தும் நடைபெறாமல் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்றார்.

... வாய்ஸ் ...

❖❖❖❖❖❖❖❖

ஆனந்த்

தமிழகத்தின் உரிமை மற்றும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தில் மாநில அரசு எவ்வித சமரசமும் செய்யாது என்று நீர்வளத்துறை அமைச்சர் திரு. ஆனந்த் தெரிவித்துள்ளார்.

மேகதாது அணை பிரச்சனை தொடர்பாக சில விளக்கங்களை சட்டப்பேரவையில் தெரிவித்த அவர், தமிழகத்தின் வாழ்வாதார பிரச்சனையான மேகதாது அணை பிரச்சனையில் எந்த சமரசத்திற்கும் மாநில அரசு உடன்படாது என்றார்.

கர்நாடக முதலமைச்சர் காவிரியின் குறுக்கே மேகதாது பகுதியில் அணை கட்டுவது குறித்து கருத்து தெரிவித்தவுடன் முதலமைச்சர் திரு. விஜய், அரசு தலைமை வழக்கறிஞர், அரசுத்துறை அதிகாரிகள், உச்சநீதிமன்ற வழக்கறிஞர்கள் ஆகியோருடன் ஆலோசித்ததை குறிப்பிட்டார்.

மேகதாது அணை கட்டுவதற்கு மத்திய அரசு எந்த விதத்திலும் அனுமதி வழங்கக்கூடாது என்று மத்திய அரசுக்கு முதலமைச்சர் கடிதம் எழுதியதாகவும், இதுகுறித்து பிரதமரை நேரில் சந்தித்து வலியுறுத்தியதையும் சுட்டிக்காட்டினார்.

இன்றைய சூழலில் புதிய நடுவர் மன்றம் அமைப்பது அவசியமானது என கருதி தான் எதிர்கட்சித் தலைவர் சொன்ன கருத்தை தீர்மானத்தில் சேர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதாகவும் அவர் கூறினார்.

காவிரி நதிநீர் பிரச்சனைக்கும், மேகதாது அணை தொடர்பான பிரச்சனைக்கும், சம்மந்தம் இல்லை என்று தெரிவித்த அவர், புதிய நடுவர் மன்றம் அமைப்பதால் ஏற்கனவே உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பிற்கு எந்த பாதிப்பும் ஏற்படாது எனவும் கூறினார்.

இந்த விவாதத்தின் போது பேசிய பா.ம.க. உறுப்பினர் திரு. கணேஷ்குமார் புதிய நடுவர் மன்றம் அமைப்பது, கர்நாடகத்திற்கு சாதகமாக அமைந்து விடும், எனவே அது கூடாது என்று தெரிவித்ததுடன் இதற்கு பா.ம.க. எதிர்ப்பு தெரிவிப்பதாக கூறினார்.

இது தொடர்பாக பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. ராமச்சந்திரனும், புதிய நடுவர் மன்றம் கூடாது என தெரிவித்தார்.

மேலும் ஒரு தீர்மானத்தின் மீது திருத்தம் வந்தால், அவை உறுப்பினர்களுக்கு அந்த திருத்தத்தை வழங்கி அது குறித்தும் விவாதித்து இருக்கவேண்டுமென்றார்.

இது தொடர்பாக விரிவான விளக்கம் ஒன்றை அளித்த மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா, விவசாயிகள் உட்பட ஒட்டு மொத்த தமிழர்களின் உணர்வுகளை மதித்து தான் இந்த தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

கர்நாடக அரசு விரிவான திட்ட அறிக்கையை வழங்கலாம் என்று மத்திய நீர்வள ஆணையம் தெரிவித்த கருத்து என்பது உச்சநீதிமன்ற தீர்ப்பிற்கு மாறானது என்றார்.

முன்பு மேகதாது அணை கட்டுவது விவசாயத்திற்காக எனக் கூறிய கர்நாடக அரசு தற்போது பெங்களுரு மக்களின் குடிநீர் ஆதாரத்திற்காகவேதான் மேகதாது அணையை கட்டப்போகிறோம் என்று சொல்வதாக சுட்டிக்காட்டினார்

அதனால் தான் சட்ட வல்லுநர்கள் நீர் மேலாண்மைத் துறை அதிகாரிகளை கலந்தாலோசித்து அவர்களின் வழிகாட்டுதல்களின் படி, புதிய ஆணையம் அமைக்க வேண்டும் என்ற முடிவை அரசு எடுத்ததாக தெரிவித்தார்.

இதுகுறித்து முன்னாள் முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின், சட்ட வல்லுநர்கள், அதிகாரிகளுடன் ஆலோசித்து இந்த புதிய ஆணையம் அமைப்பது அவசியம் என்று தெரிவித்துள்ளதையும், திரு. ஆதவ் அர்ஜுனா சுட்டிக்காட்டினார்

இந்த புதிய ஆணையம் அமைவதால் நமக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்றும், ஏற்கனவே வழங்கப்பட்ட உச்சநீதிமன்ற தீர்ப்பிற்கும், பாதகம் வராது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖

மேகதாது பகுதியில் காவிரியின் குறுக்கே கர்நாடக அரசு அணை கட்டுவதை தடுப்பது தொடர்பாக பேரவையில் முதலமைச்சரால் கொண்டுவரப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றிய தீர்மானத்தின் மீது சில கருத்துக்களை தெரிவிப்பதற்கு பிரதான எதிர்கட்சியான தி.மு.க., அ.இ.அ.தி.மு.க., பா.ம.க. மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியினர் அனுமதி கோரினர்.

இதற்கு அனுமதி மறுத்த பேரவைத் தலைவர் திரு. J.C.D. பிரபாகர் பேரவையில் இந்த தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட பிறகு, இதுகுறித்து பேச அனுமதி இல்லை என்றார்.

மேகதாது அணை பிரச்சனை தொடர்பாக பொதுப்பணித் துறை அமைச்சரின் விரிவான விளக்கத்திற்கு பின், பேரவை நடவடிக்கைகள் முடிவதற்குள் பேச அனுமதிக்கிறேன் என்று அவைத்தலைவர் தெரிவித்தார்.

பேரவையில் எழுப்பப்படும் உரிமை மற்றும் பிரச்சனைகள் குறித்தும், அவை உறுப்பினர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது குறித்தும், பேரவைத் தலைவர் சில விளக்கங்களை அளித்தார்.

இப்பிரச்சனையின் மீது கருத்து தெரிவிக்க வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்திய அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற குழு தலைவர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமியின் கோரிக்கை ஏற்கப்படாததால் அவரும், அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களும் வெளிநடப்பு செய்தனர்.

இதனிடையே சட்டப்பேரவைக்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி, காவிரி விவகாரத்தில் உச்சநீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்பு வழங்கியுள்ள நிலையில் மீண்டும் நடுவர் மன்றம் ஏன் என கேள்வி எழுப்பினார்.

மேகதாது விவகாரத்தில் திருத்தம் செய்த தீர்மானத்தை அ.இ.அ.தி.மு.க. ஆதரிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

J.C.D. பிரபாகர்

சட்டப்பேரவை உறுப்பினர்கள் பேரவையின் கண்ணியத்தையும், மாண்பையும் சிதைக்கும் வகையில் நடந்து கொள்ளக் கூடாது என்று அவைத் தலைவர் J.C.D. பிரபாகர் தெரிவித்துள்ளார்.

மக்கள் பிரதிநிதிகளான சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, அரசு விழாக்களிலும், உள்ளாட்சி அமைப்புகளிலும் உரிய முக்கியத்துவம் வழங்கவேண்டும் என்றார்.

தொகுதிகளில் நடைபெறும் அரசு விழாக்களில், அந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முறையாக அழைப்பு விடுத்து, மரபுபடியும், நெறிமுறைப்படியும் அவர்களை நடத்த வேண்டுமென்று அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும், உள்ளாட்சித்துறை அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தப் பட்டுள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

வாழ்த்து

முன்னதாக தமிழக முதலமைச்சர் திரு. விஜய்க்கு, பேரவை சார்பில் இன்று பிறந்த நாள் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖

சஞ்சய் மல்ஹோத்ரா

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் முக்கிய பங்காற்றுவதாக ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா குறிப்பிட்டுள்ளார்.

கொச்சியில் குறு சிறு நடுத்தர தொழில் முனைவோருக்கான சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியில் இன்று

உரையாற்றிய அவர், இந்நிறுவனங்கள் வருவாய் மட்டுமல்லாது ஏராளமான வேலைவாய்ப்புகளையும் வழங்குவதாக கூறினார்.

பல தசாப்தங்களாக இந்நிறுவனங்களின் வளர்ச்சியை ரிசர்வ் வங்கி ஊக்குவித்து வருவதாகவும், இதற்காக வங்கி வழங்கி வரும் பல்வேறு கடன் திட்டங்களையும் அவர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், மங்கோலியாவில் அந்நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் பெட் செட் செக் உடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

இச்சந்திப்பை தாம் பெரிதும் எதிர்நோக்கி உள்ளதாக அமைச்சர் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

2 நாள் பயணமாக மங்கோலியா சென்றுள்ள அவர், அந்நாட்டு தலைவர்களையும் சந்தித்து பேசுகிறார்.

❖❖❖❖❖❖❖❖

உயர்நீதிமன்றம்

கல்வி நிறுவனங்கள் மருத்துவமனை பேருந்து மற்றும் ரயில் நிலையங்களில் சுற்றித்திரியும் தெருநாய்களை அப்புறப்படுத்துவது தொடர்பாக அறிக்கை அளிக்க தமிழக

அரசுக்கு, சென்னை உயர்நீதிமன்றம் இன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

இவ்வழக்கை தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி மற்றும் நீதிபதி அருள்முருகன் தலைமையிலான அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்தது.

❖❖❖❖❖❖❖❖

சிவகங்கை

சிவகங்கை மாவட்டத்தில் மாநில இளையோர் விருதிற்கு தகுதியுடையவர்கள் வரும் 6-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

தூத்துக்குடி

தூத்துக்குடியில் நேற்றைய தினம் வீசிய பலத்த சூறாவளி காற்றால் முடிவைத்தானேந்தல் பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்ததாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

வானிலை

தெலங்கானா முதல் மன்னார் வளைகுடா வரை ராயல சீமா மற்றும் தமிழக பகுதிகள் வழியாக வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன்காரணமாக கோவை மாவட்டத்தின் மலை பகுதிகள் நீலகிரி திண்டுக்கல் தேனி சிவகங்கை கன்னியாகுமரி மதுரை மாவட்டங்களில் இன்று இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கன மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

டெல்டா, மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், வட தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும் இன்று மிதமான மழை பெய்யக்கூடும் என்று இம்மையம் மேலும் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

ஹாக்கி

லண்டனில் நடைபெறும் ப்ரோ லீக் ஆடவர் ஹாக்கி போட்டியில் இந்தியா நாளை பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖